
# மறக்க முடியுமா ?



தலைவர் கலைஞர்

பேராசிரியர். தி.வ. மெய்கண்டார் அவர்களின்
அன்பளிப்பு

# மறக்கமுடியுமா?

தலைவர் **கலைஞர்**

தலைமைக் கழக வெளியீடு

**திராவிட முன்னேற்றக் கழகம்**

"அண்ணா அறிவாலயம்"

367 - 369, அண்ணா சாலை

சென்னை - 600 018.

முதற்பதிப்பு : ஜனவரி 2004

விலை : ரூ. 10 /-

அச்சிட்டோர் : **சில்வர் ஸ்ட்ரீக்**
174, பீட்டர்ஸ் சாலை, சென்னை - 600 014.

## இந்நூல்.....

கழகத்தின் அறிவுக் கருவூலமாய் - கலைஞரின் மனச்சான்றாய் - கழகத்தின் செயல்பாடுகளைத் தீர்மானிக்கும் தலைமை அமைப்புகளில் தகுந்த அறிவுரை வழங்குபவராய் - நாட்டின் எந்த அவையிலும் பீடுநடை போட வல்ல அப்பழுக்கற்ற அரசியல் வித்தகராய் புகழ் பெற்றவரான திரு. முரசொலிமாறன் அவர்களைப் பற்றி தலைவர் கலைஞர் அவர்கள், 'குமுதம்' வார இதழில் ஐந்து வாரங்களாக உணர்ச்சி மயமான நினைவுகளை "மறக்கமுடியுமா?" என்ற தலைப்பில் நம்மோடு பகிர்ந்து கொண்டுள்ளார். அதனைத் தொகுத்து தலைமைக் கழகத்தின் சார்பில் நூலாக வெளியிடுவதில் பெருமை கொள்கிறோம்.

என். செல்வேந்திரன்
கழக வெளியீட்டுச் செயலாளர்,
தி.மு.க.





# மறக்கமுடியுமா?

தம்பி முரசொலி மாறன் இயக்கித் தயாரித்த திரைப் படங்களில் ஒன்று "மறக்க முடியுமா?" அந்தப் படத்தின் தலைப்பையே வைத்து இந்தக் கட்டுரையைத் தீட்டுகிறேன். அந்தப் படத்திற்கென நான் அமைத்துக் கொடுத்த திரைக்கதை வசனத்தையும் "காகித ஓடம்" போன்ற பாடல்களையும் எவ்வளவு கலை நுட்பத்துடன் அவர் இயக்கிக் காட்சியாக்கியுள்ளார் என்பதை அப்படத்திற்குக் கிடைத்த வெற்றியிலிருந்தே புரிந்து கொள்ள முடியும். பிறந்து தவழ்ந்து மழலை பேசிய போது மறக்க முடியாமல் மாறனை நான் நினைத்துக் கிடந்தது போலவே; அவர் இப்போது மறைந்து விட்ட நிலையிலும் அவரையும் – அவரது நிழலாடும் நினைவுகளையும் மறக்க முடியாமல் துடிக்கிறேன்.

"தக்கார்" என்பதையோ அல்லது "தகவிலர்" என்பதையோ ஒருவருக்கு; அவர் மறைவுக்குப் பின் எஞ்சி நிற்கும் புகழ்ச் சொல்லைக் கொண்டோ அல்லது பழிச் சொல்லைக் கொண்டோ தான் நிர்ணயிக்கப்படும் என்பது திருக்குறள்.

இந்தியத் திருநாட்டின் குடியரசுத் தலைவர், பிரதமர் ஆகியோர் தொடங்கி குடிமக்கள் வரையில் மாறனைப் பற்றிக் கொண்டுள்ள உயர் தனிக் கருத்துக்களை அவர்களே வெளியிட்ட பிறகு அவற்றை நான் திரும்பச் சொல்லப்



போவதில்லை. தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட அன்னையின் நிலைக்கு ஆளாகியுள்ளேன்.

மூன்று நான்கு வாரங்கள் நான் எழுதப் போகும் இத்தொடரினைத் தொடங்குவதற்கு முன்; கோவை சுப்பு என்கிற புகைப்பட நிபுணர் ' ஒருவர் அண்மையில் எனக்கு எழுதியுள்ள நீண்ட கடிதத்தின் சில பகுதிகளை எழுத்துப் பிசகாமல் இந்தச் சொல்லாரத்தில் கோத்துத் தருகிறேன்.

"டாக்டர் கலைஞர் அவர்களுக்கு, கோயமுத்தூரில் உள்ள சுப்பு என்கிற புகைப்படக்காரனின் அன்பு வணக்கம்!

இத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறதே புகைப் படங்கள்; நம் அருந்தவப் புதல்வர் மாறன் இடம் பெற்றிருக்கும் புகைப்படங்கள். அவற்றையெல்லாம் 'கிளிக்' செய்தது அடியேன்தான். உணர்ச்சிக் கொந்தளிப்பின் மிகுதியால் இக்கடிதத்தையும் எழுதிக் கொண்டிருக்கிறேன்.

அய்யா! இவை வெறும் புகைப்படம் அல்ல. அவருடன் இருந்த கணங்கள் மிகப் பெரும் மனித நேயப் பயணம்.

கடந்த 2000ஆம் வருடம். பா.ஜ.க. அ.தி.மு.க.வுடன் கை கோர்த்து நாட்டை ஆண்ட கால கட்டம் என்று நினைக்கிறேன். தமிழகத்தில் தி.மு. கழக ஆட்சி. தாங்கள் தான் முதலமைச்சர். ரொம்ப ரிலாக்ஸ்டாக கோவைக்கு தன் துணைவியார் திருமதி மல்லிகாவுடன்



வந்திருந்தார் மாறன். பொள்ளாச்சி ஆளியார் சென்று காடாம்பாறை மின் நிலையத்தைப் பார்வையிட்டு, அங்கிருந்து வால்பாறை சென்று, சோலையார், பரம்பிக்குளம், டாப் ஸ்லிப் என்று சுற்றிப் பார்த்து விட்டு கோவைக்கு வந்து சென்னை புறப்படுவதாக மூன்று நாள் பயணத் திட்டம். அப்போதைய அமைச்சர் பொங்கலூர் பழனிச்சாமியின் பரிந்துரையின் பேரில் நான் அம்மாமனிதரின் புகைப்படங்களை எடுக்கும் பாக்கியம் பெற்றேன்.

பொதுவாக அய்யா மாறன் என்றால் இங்குள்ள கட்சிக்காரர்களே மரியாதை நிமித்தம் எட்ட நின்றே பேசுவர். பயம் கலந்த நடுக்கத்துடனே வார்த்தைகளை தவழ விடுவார்கள். இந்தப் பயண கால கட்டத்திலும் அப்படித்தான் இருந்தார்கள். ஆனால் என்னைப் பொறுத்தவரை ஒரு தாயைப் போலவே பழகினார். காலை, மதியம், மாலை, இரவு என்று எப்போது எதிர்ப்பட்டாலும் அவர் கேட்ட வார்த்தை 'சாப்பிட்டியாப்பா' என்பது தான். சாப்பிட்டியாப்பா ? என்கிற வார்த்தையை என்னைப் போன்ற சராசரி மனிதர்களிடத்தில் மட்டுமல்ல, பல உயிர்களிடத்திலும் உணர்வுப் பூர்வமாக வெளிப்படுத்தினார் என்பது தான் இதில் உள்ள விசேஷம்.

பயணத்தில் அவர் டாப்ஸ்லிப் சென்றிருந்த போது இரவில் அங்குள்ள கிளாஸ் ஹவுஸில் தங்கியிருந்தார். அங்கிருந்தபடி மான் கூட்டத்தைக் கண்ட அவர், அங்கே படையெடுத்த பன்றிக் கூட்டத்தைப் பார்த்துக் கூடுதல் களிப்படைந்தார். அவருக்கு திடீரென்று என்ன தோன்றியதோ, வெளியே போய் நாற்காலி போட்டு அமர்ந்து கொண்டார்.


# 4



அங்கிருந்த 'கெஸ்ட்ஹவுஸ்' ஆட்களைக் கூப்பிட்டு வாழைப்பழம் கொண்டு வரச் சொல்லி பன்றிகளுக்குப் போட்டுக் கொண்டேயிருந்தார். அவைகளும் போட்டி போட்டுக் கொண்டு சாப்பிடச் சாப்பிட கெஸ்ட் ஹவுஸ்காரர்கள் வாழைப் பழத்தைக் கொண்டு வந்து கொண்டேயிருக்க, சுமார் ஒரு மணி நேரம் ஓயாது வாழைப் பழத்தை வீசிக் கொண்டேயிருந்தார். அந்தக் கண் கொள்ளாக் காட்சியைப் புகைப்படம் தான் எடுக்க முடியவில்லை. காரணம் நிரவி நிற்கும் இருட்டு!

இதே போல் இன்னொரு சம்பவம்!

அடுத்த நாள் 'டாப்ஸ்லிப்' யானைகள் முகாமுக்குச் சென்றிருந்தோம். அய்யாவின் துணைவியார் மல்லிகா அங்குள்ள யானைகளுக்கெல்லாம் வாழைப்பழம் கொடுத்தார். ஐயாவும் அதையே பின்பற்றினார். முதல் வாழைப் பழத்தை ஒரு குட்டியானைக்கு கொஞ்சம் எட்ட நின்று கொடுத்தார். குட்டி யானையோ அந்தப் பழத்தை துதிக்கையை நீட்டி வாங்கிட ரொம்பவும் சிரமப்பட்டது. அதை வரிசையாய் புகைப்படம் எடுத்த நான் விடவில்லை. "சும்மா அதோட வாயிலேயே கொடுங்கய்யா! அது ஒன்றும் செய்யாது!" என்று உரக்கக் கூவினேன். அதற்கு அவர் சிரித்துக் கொண்டே யானையை நெருங்கி வாழைப் பழத்தை அதன் வாயிலேயே திணித்தார். அப்போது அவர் முகத்தைப் பார்க்க வேண்டுமே! அப்படியே சிறு குழந்தை போல் ஆகிப் போயிருந்தார். இந்த அனுபவத்தை குமுதம் - ரிப்போர்ட்டர் இதழில் படத்துடன் பேட்டியாகக் கொடுத்தேன். அதில் அது பிரசுரமாகவும் செய்தது.



# 5



இது முடிந்து அடர்ந்த காட்டுக்குள் பயணம். டாப்ஸ்லிப் தாண்டி பரம்பிக்குளம், கேரளா எல்லைப் பகுதியில் ஏராளமான தேக்கு மரங்கள். அதை எல்லாம் நட்டவர் 'க்யூபோ உட்' என்கிற வெள்ளைக்காரர். 1870ஆம் ஆண்டில் இவர் டாப்ஸ்லிப்பிற்கு வந்து இலட்சக் கணக்கான தேக்கு மரங்களை நட்டார். அவர் மட்டும் அன்று அப்படி செய்யாவிட்டால் டாப்ஸ்லிப் மட்டுமல்ல, வால்பாறை கூட இவ்வளவு தேக்கு மரங்களைக் கண்டிருக்காது. அவர் மரக் கன்றுகளை நட்டு விட்டு தாயகம் சென்று விட்டார். 1937ல் அவர் உயிர் பிரிந்த போது அவரின் கடைசி ஆசைப்படி அவர் உடலை டாப்ஸ்லிப்பிற்கே கொண்டு வந்து அடக்கம் செய்தனர் என்று அவரின் வரலாற்றை உடன் வந்த வழிகாட்டி விவரிக்க அமைச்சர்கள் துரைமுருகன், ஆற்காட்டார், பொங்கலூர் பழனிச்சாமி உள்ளிட்டவர்கள் அனைவரும் அப்படியே கைகட்டி நின்று சில விநாடிகள் மௌன அஞ்சலி செலுத்த ஐயா மாறனுக்கு மட்டும் அப்படி செய்ய மனம் ஒப்பவில்லை.

அங்கே சமாதியில் வைத்து அஞ்சலி செலுத்த மலர்க் கொத்து இல்லாத காரணத்தாலோ என்னவோ அருகிலிருந்தவர்களிடம் தேக்கு மரத்தில் கொஞ்சம் இலைக் கொத்துக்களைப் பறித்து வரச் செய்தார். அதை ரொம்பவும் வாஞ்சையோடு வருடி மலர் கொத்து போல் ஆக்கி அச் சமாதிமேல் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

அந்த மாமனிதர் அத்தோடு நின்றாரா என்றால் இல்லை. அவரின் ஒவ்வொரு அசைவிலும் புதுமை, மனிதம்.

# 6



அவரின் மூன்று நாள் பயணத்தில் அவர் தங்கிய இடத்திற்கே வந்து பல்வேறு வி.ஐ.பி.க்களும், உள்ளூர் அரசியல் பிரமுகர்களும் மாலையும், சால்வையும் அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். அதையெல்லாம் அவரே வைத்துக் கொள்ளவில்லை.

பரம்பிக்குளம், சோலையாறு, ஆளியாறு, டாப்ஸ்லிப் என்று இவர் போகும் இடங்களிலெல்லாம் எதிர்ப்படும் வாட்ச்மேன், ஃபாரஸ்ட் கார்டுகளுக்கெல்லாம் சால்வையைப் போர்த்தி கூடவே தன் பாக்கெட்டிலிருந்து ஒவ்வொருவருக்கும் ஒரு நூறு ரூபாய் நோட்டையும் பரிசாகக் கொடுத்து அசத்தினார்.

இரண்டு நாள் கழித்து டாப்ஸ்லிப் பயணமெல்லாம் முடித்து விட்டு கோவை பயணியர் விடுதியில் அவர் தங்கியிருந்த போது நான் எடுத்த அவரின் புகைப்படங்களை யெல்லாம் ஆல்பமாக்கிக் கொண்டு போய் அவரிடம் கொடுத்தேன். அப்போது ஏராளமான கட்சிக்காரர்கள், வி.ஐ.பிக்கள் வந்து சந்தித்து அவருடன் சேர்ந்த மாதிரி புகைப்படமும் எடுத்துக் கொண்டு சென்றபடி இருந்தார்கள். அவரும் உட்கார்ந்தபடியேதான் அவர்களுடன் போஸ் கொடுத்துக் கொண்டிருந்தார். எனக்கும் அவருடன் புகைப்படம் எடுத்துக்கொள்ள ஆசை. என்னுடைய கேமராவை அங்கிருந்த உள்ளூர் போட்டோகிராபர் ஒருவரிடம் கொடுத்து விட்டு ஐயாவை அணுகினேன். “ஐயா, நானும் உங்க கூட ஒரு போட்டோ எடுத்துக்கறேனே!'' என்று பவ்யமாகக்



கேட்டதுதான் தாமதம். உடனே எழுந்து விட்டார். எழுந்தவர் நின்று கொண்டே போஸ் கொடுக்கவும் செய்தார். அதை இப்போது நினைத்தாலும் மெய்சிலிர்க்கிறது. கலைஞர்களை, படைப்பாளிகளை உரிய இடத்தில் வைக்கத் தெரிந்தவர் என்றால் அவருக்கு நிகர் அவர் தான்! என்று நான் சொல்லாத இடமில்லை.

அப்படிப்பட்ட அந்த மாமனிதர் திரும்ப கோயமுத்தூர் வருவார். அவருடன் நிச்சயம் ஊட்டிக்கும் செல்வேன் என்று அவர் மருத்துவ மனையில் இருந்த போதும் கூட அசராத நம்பிக்கை கொண்டிருந்தேன். ஆனால் அந்நம்பிக்கை பொய்யாகிவிட்டது. ஐயா மாறனின் பிரிவால் வாடும் தங்களுடனும், தங்கள் குடும்பத்தாருடனும், கழக உடன் பிறப்புக்களுடனும் இணைந்து இந்தச் சிறிய அணிற் பிள்ளையும் கண்ணீர் சுமைகளை சுமக்கக் கடமைப்பட்டிருக்கிறது."

மாறனின் உருவத்தை மட்டுமல்ல, அவர் உள்ளத்தையும் படம் பிடித்துள்ள நண்பர் எஸ்.டி.எஸ். சுப்பு போன்ற பலர், தொலைவிலிருந்து அவரை உணர்ந்தவர்கள். என்னைப் பொறுத்தவரையில் மாறன் என் தோளிலும் மடியிலுமிருந்து வளர்ந்தவர். இப்போதும் என் இதயத்தை விட்டு இறங்காதவர்.

நான் பிறந்த ஊரில் தான் அவரும் பிறந்தார். நான் பிறந்த வீட்டில் தான் அவரும் பிறந்தார்.

# 8



திருக்குவளை அஞ்சுகம் முத்துவேலர் தம்பதியர்க்கு இரண்டு மகள்களுக்குப் பிறகு மூன்றாவதாக ஆண் குழந்தை வேண்டுமென்ற அவர்களின் ஆவலை நிறைவு செய்யும் விதமாக நான் பிறந்த பிறகு அந்த வீட்டில் ஒரு பத்தாண்டு காலம் ஆண் குழந்தையே இல்லாமல்; ஏன்; குழந்தையே இல்லாமல் 1934ஆம் ஆண்டு ஆகஸ்டு 17ஆம் நாள் என் சகோதரிக்கு மாறன் பிறந்தார். எங்கள் வீட்டில் எந்தக் குழந்தை பிறந்தாலும் அது ஆணாயினும், பெண்ணாயினும் என் தாய் தந்தையர் அதற்கு முதலில் சூட்டும் பெயர் குஞ்சம்மா என்பதேயாகும். அந்தக் குஞ்சம்மாதான் எங்கள் வீட்டுக் குலதெய்வம். எங்கள் பெரிய தாயார். முத்துவேலரின் முதல் மனைவி. திருமணமாகி சில மாதங்களிலேயே அவர் காலமாகி விடவே; அவர் உடலுக்கு அணிவித்த மாலையின் பூக்களை உதிர்த்து ஒரு அழகான செல்லப் பெட்டியில் வைத்து; அந்தப் பெட்டியை, பெரியதோர் விளக்கு மாடத்தில் வைத்து அந்தப் பெரியம்மாவைக் குல தெய்வமாகவே என் வீட்டில் இன்றைக்கும் கொண்டாடி வருகிறார்கள். அந்தப் பெட்டி இப்போது திருவாரூர் வீட்டில் இருக்கிறது. திருக்குவளையில் அப்போதெல்லாம் என் தந்தை வெளியூர் இசை நிகழ்ச்சிகள் அல்லது மருத்துவத்திற்குச் செல்வதென்றால் அந்தச் செல்லப் பெட்டியிருக்கும் அலமாரி மாடத்திற்கு முன்பு கண்களை மூடிக் கொண்டு நின்று பெரியம்மாவிடம் மானசீகமாக விடை பெற்றுக் கொண்டு தான் செல்வார்.

திருக்குவளை வீட்டில் அப்போது அந்தப் பெரியம்மா பெட்டியிருந்த அறையில் இப்போது சிறிய அளவில் நூலகம்



இருக்கிறது. பெட்டியோ திருவாரூர் வீட்டுக்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே கொண்டு வரப்பட்டு விட்டது.

வீட்டுக் குலதெய்வமாகக் கருதப்படும் பெரியம்மா குஞ்சம்மாள் பற்றியும் – அவருக்கு அணிவிக்கப்பட்ட மலர்கள் நிறைந்த செல்லப் பெட்டியைப் பற்றியும் – இவ்வளவு விரிவாகக் குறிப்பிடுவதற்குக் காரணம் இருக்கிறது.

மாறனுக்கு இரண்டு அல்லது மூன்று வயது இருக்கும். என் கையைப் பற்றிக் கொண்டு தத்தி நடக்கும் பருவம். முதல் பெயர் தியாகராஜசுந்தரம் – பிறகு நெடுமாறன் என்று மாற்றப்பட்டு – மாறன் என்று ஆகி; இறுதியில் முரசொலி மாறன் எனப் புகழ் பெற்றார்.

குழந்தை மாறனை வீட்டில் விட்டு விட்டு, வழக்கம் போல் முத்தமாரி பொழிந்து விட்டு – ஐந்தாறு வீடுகள் தள்ளியிருக்கும் நான் படிக்கும் பள்ளிக்கூடத்துக்குப் போயிருந்தேன். பள்ளியில் ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருக்கும்போது அதிர்ச்சியான செய்தியொன்று என் காதில் விழுந்தது. மாறனுக்கு உடம்பு சரியில்லை, ரொம்ப ஆபத்து, பிள்ளை பிழைப்பது கஷ்டம், இத்தனை செய்திகளும் சவுக்கடிகளாக – இடிகளாக என்னைத் தாக்கிட ஓடினேன் வீடு நோக்கி.

வீட்டு வாயிற்புறத்தில், கூடத்தில் உறவினர்கள் பரபரப்புடன் காணப்பட்டனர். என்ன ஆச்சு என்று அலறியவாறு அம்மாவைப் பார்த்தேன். அம்மா என்னைக் கட்டிப் பிடித்துக் கொண்டு கதறினார்கள். ஓடிய வேகத்தில்



என் நெற்றிப் புருவத்தில் தூணின் விளிம்பு இடித்த வலி கூடத் தெரியாமல் குழந்தை யிருக்குமிடம் பாய்ந்து சென்றேன். குழந்தை பிரக்ஞையற்றுக் கிடந்தது. வாயிலிருந்து நுரை வேறு வழிந்தது. சில நிமிடங்கள் விட்டு அடுத்த நிமிடம் குழந்தையின் கால் கைகள் வெட்டி வெட்டி இழுத்தன. என் தந்தை மருத்துவம் கற்றவர் என்றாலும் அவருக்கும் ஒன்றும் கைகால் ஓடவில்லை. வீடு முழுதும் அழுகை ஓலம் – வேதனைக் கோலம்!

அழுதுகொண்டே பிள்ளையின் அருகில் உட்கார்ந்திருந்த நான் திடீரென ஆவேசமுற்று எழுந்தேன். குழந்தை மாறனைக் கையில் தூக்கிக் கொண்டேன். தூக்கிய குழந்தையுடன் வீட்டுக்குள் பெரியம்மா அறைக்குள் ஓடினேன். குழந்தையை அந்தச் செல்லப் பெட்டியின் முன்னே கிடத்தினேன்.

"பாரும்மா, பாரு; உன் பேரக் குழந்தையை – உன்னைக் குல தெய்வம்னு வச்சுக் கொண்டாடுகிறோமே; அதுக்கு நீ கொடுக்கிற பரிசா இது? இப்ப குழந்தைக்கு நீ உயிர் கொடுக்கலேன்னா – பிழைக்க வைக்கலேன்னா – வந்திருக்கிற வியாதியை குணப்படுத்துலேன்னா – உனக்கு எதுக்கு அலமாரி? உனக்கு எதுக்கு செல்லப் பெட்டி?"

என்று பைத்தியம் பிடித்தவனைப் போலவும் – வெறி கொண்டவனைப் போலவும் – உரக்கக் கத்தினேன். விளக்கு, சாம்பிராணி போடும் தூபம், தாம்பாளம் என அங்கிருந்த எல்லாப் பொருள்களையும் கையால் அடித்து உடைத்து மூலைக் கொன்றாக இறைத்தேன்.



யார் பிடியிலும் அடங்காமல் நான் ஆடிய "பேயாட்டம்" கண்டு வீட்டிலே இருந்தவர்கள் எனக்கென்னமோ ஆகி விட்டது என்று அதிர்ச்சி அடைந்து விட்டார்கள். இவ்வளவுக்கும் குழந்தை கண் விழித்துப் பார்க்கவில்லை. கை கால்கள் கழுத்து தலை வரையில் வெட்டி வெட்டி இழுப்பதும் நிற்கவில்லை. உள்ளூர் மருத்துவர் இன்னொருவர் வந்தார். அவரும் உதட்டைப் பிதுக்கி விட்டார். இரண்டு முறை நான் மயக்கமுற்று மூர்ச்சித்தேன்.

இதற்கிடையே பக்கத்து ஊர் – மூன்று நான்கு கல் தொலைவிலே திருவாய்மூர் என்ற ஊரிலே இருந்து ஒரு வைத்தியர் அழைத்து வரப்பட்டார். அவர் குழந்தையை நன்றாகப் பரிசோதித்து விட்டு: "பயப்படுவதற்கு ஒன்றுமில்லை" என்று எங்களை யெல்லாம் தேற்றினார். உடனே போய் வேப்பெண்ணெய் வாங்கி வரச் சொன்னார்.

வேப்பெண்ணையை குழந்தையின் உச்சி முதல் உள்ளங்கால் வரையில் தடவினார். அரைமணி நேரத்திற்கெல்லாம் அந்த இழுப்பும் வலிப்பும் நின்று, குழந்தை கண்விழித்துப் பார்க்கவே – "பயப்படாதிங்க; இது கணை என்ற ஒரு வியாதி – குழந்தைகளுக்கு வர்ரது சகஜம் தான்!" என்று வைத்தியர் சொல்லி எங்கள் முகத்தில் புன்னகையை வரவழைத்தார்.

மறுநாள் குழந்தை, விளையாடக் கிளம்பிவிடவே; என் தாயார் என்னைப் பிடிவாதமாக இழுத்துக் கொண்டு போய் எங்கள் குல தெய்வம் குஞ்சம்மா பெரியம்மாவிடம் நிறுத்தி;




ஆத்திரத்திலே அந்தம்மாவை திட்டியதற்காக மன்னிப்பு கேட்க வைத்தார்.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு எத்தனையோ ஆண்டுகள் கடந்து அறிஞர் அண்ணா எழுதிய வேலைக்காரி திரைப்படத்தில் ஆனந்தன் என்ற கதா பாத்திரம் (கே.ஆர். ராமசாமி) – அவன் மிகவும் பக்தி செலுத்திய காளியம்மன், அவன் தரித்திரத்தைப் போக்கவில்லை என்ற கோபத்தில் அம்மனின் பூஜைப் பொருள்களையெல்லாம் வாரி இறைத்து ஆலயத்தில் ஆவேசமாக அம்மனையே வசைமாரி பொழிகிற காட்சியைக் கண்ட போது; எனக்கு மாறனின் குழந்தைப் பருவ நோயும் – நான் எங்கள் குல தெய்வத்தின் முன்னால் ஆத்திரத்தில் பேசிய பேச்சும் ஆவேசமாக நடந்து கொண்டதும் நினைவில் நிழலாடின.

அளவுக்கு மீறி அன்பும் பக்தியும் வைத்து விட்டால்; ஏமாற்றமடையும் போது; அது தெய்வமாகவே இருந்தாலும் அதைத் திட்டத் தான் தோன்றும் என்பதற்கு எடுத்துக் காட்டாக அமைந்த அண்ணாவின் வேலைக்காரி திரைப்படக் காட்சி எனக்கும் பொருந்துவது போலிருந்தது மாறனின் குழந்தைப் பருவ நிகழ்ச்சியை நினைத்துக் கொண்டதால்!

திருக்குவளையில் ஆரம்பப் பள்ளி படிப்பு முடிந்து திருவாரூர் பள்ளியில் நான் சேர்ந்து படித்துக் கொண்டிருந்த போது விடுமுறையைக் கழிக்க என் சொந்த ஊரான திருக்குவளைக்கு ஒரு முறை சென்றிருந்தேன். திருக்குவளை பள்ளி மாணவர் சங்க ஆண்டு விழாவில் துருவன் நாடகம்





நடத்த ஏற்பாடாகியிருந்தது. அதில் இந்திரனாக நடிக்க இருந்த பையனுக்கு நாடகத்தன்று திடீரெனக் கடுமையான காய்ச்சல். வேறு வழியில்லை. பழைய மாணவனாகிய நான் அந்தப் பொறுப்பை நிறைவேற்ற வேண்டிய நெருக்கடிக்கு ஆளானேன். இந்திரனுக்குரிய வசனங்களை நானே எழுதிக் கொண்டேன். வசனங்கள் எல்லாமே "குடியரசு" வாடை தான். நாரதர் என்னைப் பார்த்து "ஹே இந்திரா! பூலோகத்தில் ஒரே குழப்பம்! நீ இந்திராணியோடு கொட்டமடிக்கிறாய்! இது தான் உன் ராஜ்ய பரிபாலனத்துக்கு அழகோ?" என்று ஆத்திரத்தோடு கேட்டார். உடனே இந்திரன், "ஆமாம், இது தான் என் ராஜ்ய பரிபாலனத்தின் அழகு, இலக்கணம் எல்லாமே! நான் இந்திராணியோடு கொட்டமடிக்காமல் வேறு யாரோடு கொட்டம் அடிப்பேன்? அகல்யாவிடம் கொஞ்சியதற்குத் தான் உடம்பெல்லாம் கண்களாகிப் போகுமாறு சாபம் பெற்றுவிட்டேன். ஒரு கண் இரண்டு கண் இருக்கும் தேவர்களே காதல் வியாதியால் கஷ்டப்படும்போது ஆயிரம் கண்ணுடைய நான் என்ன செய்வேன்?" என்று பதில் கூறுவான். இப்படியொரு புதுமையான இந்திர வேஷத்தைப் போட்டுக் கொண்டேன்.

அந்த நாடகத்தில் துருவனாக நடித்தது நவநீதகிருஷ்ணன்; துருவனுடைய தம்பியாக நடித்த பால நடிகன் யார் தெரியுமா? மாறன் தான்! துருவனைப் பார்த்து, "ஏய் தூதுவா! நான் யார் தெரியுமா? எங்கப்பா மதியில் நீ உக்காதக் கூதாது!" என்று மாறன் பேசிய மழலை மொழியை



நான் இன்னும் மறக்கவில்லை. இளமைப் பருவத்தில் மாறனின் நாக்கு நுனியில் ஒரு சவ்வு வளர்ந்து அது அடிவாயில் ஒட்டிக் கொண்டிருந்ததால் அந்த சவ்வு அறுவை சிகிச்சை செய்து அகற்றப்படும் வரையில் ட ர ற என்ற எழுத்துக்களை த என்ற ஒலியுடன் தான் மாறன் உச்சரிக்க வேண்டியிருந்தது.

மாறன் பேசுவதைப் பார்த்து பள்ளி நண்பர்கள், உறவினர் வீட்டுப் பிள்ளைகள் எல்லாம் “தத்தா புத்தா” என்று கூறிக் கேலி செய்வார்கள். சிறுவன் மாறனுக்கு கோபம் வரும், அதனால் அதிகம் பேசாமலே இருப்பார். எதிர்காலத்தில் இந்தியத் தலைவர்கள் எல்லாம் புகழக்கூடிய “அறிவாளி ஆவோம்” என்பதாலோ என்னவோ; தன்னைப் “புத்திசாலி” என்றே கூப்பிட வேண்டும் என்று வற்புறுத்துவார். அப்படிக் கூப்பிட்டால்தான் ஏன் என்று கேட்டு மறுமொழியே சொல்வார்.

அவரது அந்த இளமைப் பிராயத்தில் டைரக்டர் கே. சுப்பிரமணியம் அவர்கள் டைரக்ட் செய்து வெளியிடப்பட்ட “பால யோகினி” என்ற திரைப் படம் வெளிவந்து வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருந்தது. “அய்யா, சிறுமி ஏழை என் மேல் மனம் இரங்காதா ?” என்ற ஒரு ஊனமுற்ற பிச்சைக்கார சிறுமியின் பாடல் அந்தப் படத்தில் வந்து; அது ஒலிக்காத இடமில்லை. அந்தப் படத்தில் இன்னொரு சிறுமி; மரக் குதிரையில் அமர்ந்து “கண்ணே பாப்பா; மிட்டாய் வாங்கித் தருகின்றேன்” என்று குழந்தைகள் பாட்டு ஒன்றைப் பாடுவார். அந்தச் சிறுமி வேடத்தில் நடித்தவர் பெயர் பேபி சரோஜா!



அந்தக் குழந்தை நடிகையைக் கல்யாணம் செய்து கொள்வேன் என்று குழந்தை மாறன் அடம் பிடிக்கும் நிகழ்ச்சி அன்றாடம் நடைபெறும். ஊரார் இதற்காகவே மாறனைக் கிண்டல் செய்வார்கள். நான் செல்லமாக மாறன் முதுகில் இரண்டு தட்டு தட்டி படிப்பு சொல்லிக் கொடுக்க இழுத்துக் கொண்டு போவேன்.

ஒருநாள் நான் திருவாரூர் பள்ளி விடுமுறையை முன்னிட்டு கிராமத்துக்கு வருகிறேன். கிராமத்து வீடு முழுதும் – சுவர்கள், கதவுகள் எல்லா இடத்திலும் "பேபி சரோஜா" படங்கள் ஒட்டப்பட்டிருக்கின்றன. இது யார் வேலை என்று கோபமாகக் கேட்கிறேன். "எல்லாம் உன் மருமகன் தேராசன் வேலை தான்" என்று சிரிக்கிறார் என் அம்மா. தியாகராஜ சுந்தரம் என்ற மாறனின் முதல் பெயரை "தேராசன்" என்று தான் அஞ்சுகத்தம்மையார்; (மாறனின் பாட்டி) அவர்கள் மறையும் காலம் வரையில் அன்போடு அழைத்து மகிழ்வார்.

திரைப்படம், நாடகம் இவற்றில் விருப்பமுடையவராக இளமைக் காலத்தில் மாறன் இருந்தாலும்கூட படிப்பில் ஆழ்ந்த கவனமுடையவராகத் திகழ்ந்தார். கிராமப்புறத்து ஆசிரியர் எனக்குப் பாடம் சொல்லிக் கொடுத்து என்னை திருவாரூரில் உயர்நிலைப்பள்ளியில் மூன்றாம் படிவத்தில் சேர்த்து விடுவதாகச் சொல்லி அழைத்துப் போய் அங்கே போய் மேல் வகுப்புகளில் தொடங்கி தேர்வு எழுதி, இறுதியில் மூன்றாம் படிவம் – இரண்டாம் படிவம் – முதல் படிவம் ஆகியவற்றுக்குத் தேர்வு கிடைக்காமல் ஐந்தாம் வகுப்பில் என்னுடைய பிடிவாத குணத்தின் காரணமாக, என்னைத் தேர்வு செய்து



"சேர்க்காவிட்டால் குளத்தில் விழுந்து விடுவேன்" என்று மிரட்டிய பிறகு தான் ஐந்தாம் வகுப்பில் என்னைச் சேர்த்துக் கொண்டார்கள். ஆனால் நான் மாறனுக்கு மிகுந்த அக்கறையுடன் படிப்பு சொல்லிக் கொடுத்து, மாறனும் ஆர்வத்துடன் படித்த காரணத்தால் அவரை மூன்றாம் வகுப்பிலிருந்து ஒரேயடியாக ஐந்தாம் வகுப்பில் தேர்வு எழுத வைத்து சேர்த்துவிட்டேன். மாறன் ஒவ்வொரு வகுப்பிலும் நிறைய மதிப்பெண்கள் பெறுகிற அளவுக்கு தினந்தோறும் மாறனையும், சொர்ணத்தையும் கசக்கிப் பிழிந்திருக்கிறேன். அவர்கள் இருவரும் பள்ளியில் படித்த நேரம் போக என்னிடம்தான் அதிக நேரம் படித்திருக்கிறார்கள். கிராமத்துப் பள்ளிக் கூட நாடகத்தில் நடித்ததின் தொடர்ச்சியாக பிறகு நான் எழுதி நடித்த கொள்கைப் பிரச்சார நாடகமான "தூக்குமேடை"யில், வனிதா என்ற பார்ப்பன சிறுமியாகப் பல மேடைகளில் நடித்திருக்கிறார்.

சிவந்த மேனி, சிரிப்பு தவழும் முகம் – பார்ப்பவர் எவரும் மாறனை அந்த வேடத்தில் அசல் பிராமணப் பெண் என்றே எண்ணிக் கொள்வார்கள்.

கல்லூரிப் படிப்புக்கு செல்ல முடியாமல் பள்ளி இறுதி வகுப்பிலேயே (எஸ்.எஸ்.எல்.சி.) மூன்று தடவை கட்டை போட்டவன் நான். இறுதி வகுப்பு தேர்வு எழுதுவதற்குப் போகாமலேயே பெரியார் அவர்களுடன் தஞ்சை மாவட்டச் சுற்றுப்பயணத்துக்குப் போய் விட்டவன். ஆனால் மாறனைக் கல்லூரி காணச் செய்து, எம்.ஏ., வரையில் படித்துப் பட்டம் பெறச் செய்த முயற்சியில் எனக்குப் பெரும் பங்கு உண்டு.



தலைவர் கலைஞருடன் முரசொலி மாறன், முரசொலி ஆசிரியர் செல்வம்





பட்டப் படிப்பு முடிந்தவுடன் முரசொலி பத்திரிகையை கவனித்துக் கொள்ளும் பொறுப்பு முழுவதையும் மாறன் ஏற்றுக் கொள்ளுமாறு செய்தேன். சேலம் மாடர்ன் தியேட்டர், கோவை ஜுபிடர், சென்னை என்று நான் திரைப்படக் கதை எழுதும் பணிகளுக்காகவும், பெரும்பாலும் கட்சிப் பணிகளுக்காகவும் நாட்களை ஒதுக்க வேண்டியிருந்ததால் முரசொலியை முழுமையாகப் பொறுப்பேற்று நடத்திய மாறன் முரசொலி மாறனாகவே ஆகி விட்டார்.

அதன் விளைவு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது 1965ஆம் ஆண்டு முரசொலியில் போராட்டத்தைத் தூண்டி எழுதினேன் என்றும் மாணவர்களைத் தூண்டி விட்டேன் என்றும் திரு. பக்தவத்சலனார் ஆட்சியில் பாதுகாப்பு சட்டப்படி கைது செய்யப்பட்டு பாளையங்கோட்டை தனிமைச் சிறையில் நான் அடைக்கப்பட்ட போது; முரசொலி மாறனும் அதே பிரிவில் கைது செய்யப்பட்டு சென்னை சிறையில் அடைக்கப்பட்டார்.

அப்பொழுது முரசொலியில் தனது அண்ணன் மாறன் ஏற்றுக் கொண்டிருந்த அந்தப் பாத்திரத்தை இப்போது அவர் தம்பி செல்வம் ஏற்றுக் கொண்டு அரசு விருந்தினராக அடிக்கடி சிறை சென்று வருகிறார். சட்டப் பேரவை கூண்டிலே நிறுத்தப்பட்ட சரித்திரத்தைக் கூட செல்வம் காணத் தவறவில்லை.

## 18



மாறன் எழுத்துத் துறையில் என் நிழலாகத் திகழ்ந்து வளர்ந்து விட்ட காரணத்தால் குலதெய்வம் திரைப்படத்துக்கு அவர் திரைக்கதை வசனம் எழுத வேண்டு மென்று ஏ.வி.எம். நிறுவனத்தாரும் அப்படத்தின் இயக்குநர்கள் என் அன்பு நண்பர்கள் கிருஷ்ணன் பஞ்சுவும் கட்டாயப் படுத்தி எழுதிட வைத்தனர். இலட்சிய நடிகர் எஸ்.எஸ்.ஆர். கதாநாயகனாக நடித்த அப்படம் பெரும் வெற்றி பெற்றது. அதனையொட்டி நடிகர் திலகம் சிவாஜி நடித்த "அன்னையின் ஆணை" தொடங்கி; சுமார் இருபது படங்களுக்கு மாறன் திரைக்கதை வசனம் எழுதினார். இரண்டு படங்களை டைரக்ட் செய்தார். அந்தப் படங்கள் "மறக்க முடியுமா?"; "வாலிபவிருந்து" என்ற படங்களாகும். "மேகலா பிக்சர்ஸ்" நிர்வாகப் பொறுப்பேற்று காஞ்சித் தலைவன், பூம்புகார், எங்கள் தங்கம், பூமாலை போன்ற படங்களின் தயாரிப்பாளராகவும் விளங்கினார்.

இப்படிப் பத்திரிகையுலகிலும், கலையுலகிலும் முத்திரை பதித்தவர் அவர். பத்திரிகைத்துறையில் அவர் ஆற்றிய பணிக்காக அந்தத் துறை அவரைப் பெரிதும் பாராட்டி கண்ணீர் அஞ்சலி செலுத்தியிருக்கிறது. அதைப் போல கலையுலகப் பிரமுகர்கள் பலரும் தனிப்பட்ட முறையில் நேரில் வந்து அஞ்சலி செலுத்தினர். ஆனால் கட்சிக் கண்ணாடி போட்டுக்கொண்டு கலையுலகம்தான் திரைப்பட வசன கர்த்தாவாகவும், இயக்குநராகவும், தயாரிப்பாளராகவும்



விளங்கிய மாறனை அமைப்பு ரீதியாக நினைப்பது ஆபத்து என அஞ்சி நடுங்கி ஒதுங்கி விட்டது. அந்த நல்ல உள்ளங்கள் நாளும் வாழ்க! அச்சம் தவிர் என்றார் பாரதி! அவர் நினைவு போற்றுவோம்!

மறைந்தும் மறையாத மாறன் நினைவாக அவர் முத்திரை பொறித்த அந்தப் படங்களை நினைவுகூர்வோம்.

**1. குலதெய்வம் (1956)**
**2. அன்பு எங்கே (1958)**
**3. அன்னையின் ஆணை (1958)**
**4. சகோதரி (1959)**
**5. தலைகொடுத்தான் தம்பி (1959)**
**6. நல்ல தீர்ப்பு (1959)**
**7. எங்கள் செல்வி (1960)**
**8. புதிய பாதை (1960)**
**9. அன்பு மகன் (1961)**
**10. கவிதா (1962)**
**11. மனமுள்ள மறுதாரம்**
**12. மரகதம்**
**13. குமாரராஜா**


எனக்கு 20 வயது நிறைவதற்குள்ளாகவே திருமணம் நடந்து விட்டது. அதைப் போலவே மாறனுக்கும் திருமணம் செய்து வைத்து பேரனை மணக்கோலத்தில் காண வேண்டுமென்று என் அன்னை அஞ்சுகம் அம்மையார் துடியாய்த் துடித்தார்கள். பாட்டியின் விருப்பம் எதுவானாலும் அதனைப் பாச உணர்வுடன் நிறைவேற்றக் கூடிய மாறன்;



திருமண விஷயத்தில் மட்டும் பிடிவாதமாக மறுப்பு சொல்லியே வந்தார். அவரது 25வது வயதுவரையில் நாள்தோறும் மாறனிடம் நயமாகக் கேட்டும்; தனது காலம் விரைவில் முடிந்துவிடும், அதற்குள் திருமணம் செய்துகொள் என்று பாட்டியார் பயமுறுத்திப் பார்த்தும் மாறனிடம் எதுவும் நடக்கவில்லை.

அம்மாவின் ஆதங்கத்தையும் மாறனின் பிடிவாதத்தையும் கண்டு மனமுருகிய அண்ணா அவர்கள், மாறனை அழைத்துக் கொண்டு அவரே பெண் பார்க்கக் கும்பகோணம் பிடில் மேதை ராஜமாணிக்கம் பிள்ளை வீட்டுக்கே புறப்பட்டு விட்டார். அண்ணாவே மாறனுக்குப் பெண் கேட்டு நேரில் வந்தது கண்ட பெரியவர் ராஜமாணிக்கம் பிள்ளை மகிழ்ச்சி வெள்ளத்தில்தான் மிதந்தார். பெண்ணை நேரில் பார்த்த மாறன் பெண் பிடித்திருக்கிறது, ஆனால் இப்போது எனக்குத் திருமணம் வேண்டாம் என்று ஒரேயடியாகச் சொல்லி விட்டார்.

திருமணம் நிச்சயம் செய்து கொண்டு வருவார்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்த பாட்டிக்கு ஏமாற்றம்தான் மிச்சம். பேரன் திருமணத்துக்கு சம்மதிக்கவில்லையே என்ற அந்தக் கவலையிலேயே என் அம்மா நோயுற்றுப் படுக்கையில் விழுந்தார்கள். சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் தீவிர சிகிச்சையளிக்கப்பட்டும் பலனின்றி அந்த அன்புக் கருவூலத்தின் ஆவி **27.1.1963** அன்று அடங்கிப் போய் விட்டது. ‘‘அய்யோ; எங்கள் வீட்டு ஆலமரம் விழுந்து விட்டதே!’’ என்று அலறித் துடித்த நான், அப்போது அருகில் நின்று அழுது கொண்டிருந்த மாறன் கன்னத்தில் அவர் கன்னம் சிவக்க, என் கை சிவக்க ஓர் அடி கொடுத்து ‘‘ஏய்; கடைசி வரையில் இந்த



'மாறன்' என்றால் என்ன சாமான்யமா ! - அண்ணா



மூதறிஞர் ராஜாஜியின் வாழ்த்து



ஜீவனின் ஆசையை நிறைவேற்றாமல் பிடிவாதம் பிடித்து விட்டாயே!" என்று கோபத்தில் கூக்குரலிட்டேன்.

மருத்துவமனையிலிருந்து அம்மாவின் உடலை வீட்டுக்குக் கொண்டு வருகிறோம்; பெருந்தலைவர் முதலமைச்சர் காமராஜர் அவர்கள் எங்களுக்கு முன்னால் வீட்டில் காத்திருந்து எங்களுக்கு ஆறுதல் கூறியதுடன் அம்மாவுக்கும் இறுதி அஞ்சலி செலுத்தி விட்டுச் செல்கிறார். டெல்லியில் மாநிலங்களவையில் பணியாற்றச் சென்றிருந்த அண்ணா அவர்கள் அன்றிரவே சென்னைக்கு விரைந்து வந்து அன்னைக்கு அஞ்சலி செலுத்தியதுடன், மாறனையும் அருகில் அழைத்து அந்த ஆண்டிலேயே திருமணம் செய்து கொள்கிறேன் என்று மாறன் வாயினால் உறுதி மொழியும் கூறும்படியாகச் செய்த அந்த நிகழ்ச்சி; இன்னமும் என் கண் எதிரே கண்கொள்ளாக் காட்சியாக ஒளி விடுகிறது. அதன்படி அதே **1963**ஆம் ஆண்டு செப்டம்பர் **15**ஆம் நாள் அதாவது அண்ணா பிறந்த நாளிலேயே மாறன் – மல்லிகா திருமணவிழா அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையிலேயே நடைபெற்றது சென்னை ஆபட்ஸ்பரி மண்டபத்தில்!

திருமணத்திற்கு முதல் நாள் பெண் அழைப்பு – என்னுடைய ஆருயிர் நண்பர்களில் ஒருவரும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் "கறுப்பு இளவரசர்" என்று செல்லமாக அழைக்கப்பட்டவருமான கடலூர் இளம்வழுதி அவர்கள்; அந்த நிகழ்ச்சியின்போது என்னுடன் இருந்தவர், பெண்ணைப் பார்த்து விட்டுச் சொன்னார்; "மாறன் இவ்வளவு காலம் தாமதித்தது வீண் போகவில்லை – ரவி வர்மாவிடமே சொல்லி உங்கள் மருமகனுக்கு ஒரு ஜோடியை தயாரித்துக்



கொடுத்திருக்கிறீர்களே!'' என்றார். அப்படியொரு அழகோவியமாக அருங் குணவதியாக மாறனுக்கு மனைவியாக; மல்லிகா எங்கள் வீட்டு மருமகளாக வந்தார்.

மாறனுக்கு எல்லாமே பெரும் பேறாகவே அமைந்தது. மனம் போல மனைவி – அவரை மனச்சாட்சியாகக் கருதிய இந்த மாமன் – பேரன்பை அவர் மீது பொழிந்த பெரியம்மா, பெற்று வளர்த்த அம்மா, பாசம் நிறைந்த பாட்டி, அன்பு பொழிந்த அத்தைமார்கள், அறிவார்ந்த பிள்ளைகளும் பெண்ணும், அட்டியில்லை அவர் வார்த்தைக்கு என்று அனுசரித்து நடக்கும் அமிர்தம், செல்வம் என்ற அருமைத் தம்பிகள், எங்கள் குடும்பம், அவர் குடும்பம் என்றில்லாமல் எல்லோர்க்கும் செல்லப்பிள்ளை என்ற சிறப்புரிமை இப்படி எல்லாச் செல்வமும் குறையாமல் பெற்றிருந்தும் ஆயுள் செல்வத்தை மட்டுமே காலம் அள்ளிச் செல்லும் அநியாயக் கொள்ளைக்கு ஆட்பட்டு விட்டார்.

நான் கோவை சென்ட்ரல் ஸ்டுடியோவில் ஜுபிடர் பிக்சர்ஸ் ராஜகுமாரி படத்திற்கு எழுதிக் கொண்டிருந்த போது, மிக இளைஞராக இருந்த மாறனுக்கு அடிக்கடி கடிதம் எழுதுவேன். அவரும் தனது பதினோராவது வயதிலேயே எனக்குப் பதில் கடிதங்கள் கற்பனையும் சுவையும் கற்கண்டென இனிக்கும் வண்ணம் எழுதுவார். இந்தத் தடவை எனக்கு இரண்டு பக்கங்களில் ஒரு சிறுகதை எழுதவும் என்று எழுதியிருந்தேன்.

அப்பொழுது என் மருமகன் செய்த குறும்பைப் பாருங்கள்! மாணவப் பருவத்தில் நான் ஒரு பெண்ணைக் காதலித்து; சுயமரியாதைத் திருமணம் தான் நடத்திக் கொள்ள



வேண்டுமென்று பிடிவாதம் காட்டியதால் பெண் வீட்டார் அதற்குச் சம்மதிக்காமல் அந்தப் பெண்ணை வேறொருவருக்கு திருமணம் செய்து கொடுத்துவிட்டார்கள். இந்த விஷயத்தைப் பின்னணியாக வைத்து மாறன் ஒரு சிறு கதை எழுதி எனக்குத் தபாலில் அனுப்பியிருந்தார்.

"கடுமையான கட்சிக் கொள்கையா? காதலின் சக்தியா? இந்தப் போராட்டத்தில் காதல் கிளி பறந்து போய் விட்டது தான் மிச்சம்" என்ற கருத்துப்பட அவர் எழுதிய அந்தச் சிறுகதைக்கு அவர் வைத்திருந்த தலைப்பு; "கூண்டை விட்டுக் கிளி பறந்தது!" என்பதாகும். அன்று அந்த இளமைப் பருவத்தில் அவர் எனக்காக எழுதி அனுப்பிய சிறுகதைக்குச் சூட்டிய தலைப்பைப் போலவே என் தோளில் தொத்தி வளர்ந்த மாறன் எனும் அந்தக் கிளி பறந்து போய் விட்டது. ஆனால் அந்தக் கிளியின் பேச்சு என் இதயக் கூண்டில் எதிரொலித்துக் கொண்டு தானிருக்கிறது.

மறுபிறவியில் எனக்கு நம்பிக்கையில்லை; ஆனால் மாறனும் நானும் மறுபிறவி எடுத்த பயங்கரமான நிகழ்ச்சிகளை சந்தித்தது உண்டு.

மாறனைப் பற்றிய "மறக்க முடியுமா" எனும் இந்தத் தொடரில் அவரது அரசியல் எழுச்சி பற்றியோ – "ஏன் வேண்டும் இன்பத் திராவிடம்?" என்ற புத்தகத்தின் வாயிலாக அவர் எடுத்து வைத்த வாதங்களின் வலிமை பற்றியோ – "மாநில சுயாட்சி" கோரிக்கையை ஒரு வேத புத்தகம் போலவே தயாரித்துக் கொடுத்த அவரது அறிவாற்றல் பற்றியோ – மத்தியில் அமைச்சராகி மாப்புகழ் கொண்டது பற்றியோ –

## 24



அரசியல் அரங்கில் மாறன் என்ற கோணத்தில் அவரைப் படம் பிடித்துக் காட்டாமல் வாழ்க்கையில் நாங்கள் சந்தித்த சம்பவங்களை மட்டுமே விவரிப்பது என் தலையாய நோக்கமாகி அவைகளை நினைவு கூர்ந்திடும் கடமையைச் செய்கிறேன்.

"ஏன் வேண்டும் இன்பத் திராவிடம்?" என்ற நூலுக்கு அணிந்துரை எழுதிய அண்ணா அவர்கள் "மாறன் என்றால் சாமான்யமா – என் தம்பியல்லவோ! அதனால் தான் "ஏடு" கனிவும், தெளிவும், சுவையும், பயனும் குலுங்கும் நிலையில் இருக்கிறது. பூகோளம், சரிதம், புள்ளி விபரம் எனும் மூன்று துறைகளிலும் அப்பழுக்கற்ற ஆதாரங்களை எடுத்துக் காட்டியிருப்பதில் விளக்கமும் எழிலும் நிரம்ப இருக்கிறது" என்று மனந்திறந்து பாராட்டியிருக்கிறார்.

திராவிட இயக்கத்தின் கொள்கைகளுக்கு புத்தக வடிவம் தரக் கூடியவர் – எழுத்து உருவில் மக்களிடம் கொண்டு செல்லக் கூடியவர் என்று மட்டுமே அறிமுகமாகியிருந்த மாறனை பொது மக்களிடமும் பழகிட வேண்டும் எனும் ஆவல் என்னைப் போலவே திருச்சி அன்பில் தர்மலிங்கம் போன்றவர்களுக்கும், மன்னை நாராயணசாமி போன்றவர்களுக்கும் உண்டு. அதையொட்டி அன்பில் தர்மலிங்கம் முன்னின்று நடத்திய திருக்காட்டுப்பள்ளி திருமணம் ஒன்றுக்கு என்னைத் தலைமையேற்றிட அழைத்ததுடன் மாறனையும் வற்புறுத்தி அழைத்தார்கள். அன்பில், மன்னை போன்ற இயக்க முன்னோடிகளிடம் தனி மரியாதை கொண்டிருந்த



மாறனும் அவர்கள் விருப்பத்தைத் தட்டிக் கழிக்காமல் என்னுடன் திருக்காட்டுப் பள்ளிக்கு வந்தார்.

எங்களுடன் அன்பில் தர்மலிங்கம், பொன்மலை பராங்குசம், திராவிடப் பண்ணை முத்துகிருஷ்ணன் ஆகியோரும் அந்தத் திருமணத்திற்கு வந்திருந்தார்கள். நாங்கள் ஆற்றங்கரைப் பாதையொன்றில் காரில் சென்று கொண்டிருந்தோம். அப்போது அதே திருமணத்திற்கென கூட்டமாகச் சில நண்பர்கள் நடந்து வந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் நாங்கள் காரில் செல்வதைப் பார்த்ததும் எங்களுக்கு முன்பே மணவிழாப் பந்தலுக்கு அவர்கள் சென்று விட வேண்டுமென்று அவசரப்பட்டுப் பரபரப்படைந்தார்கள்.


நாங்கள் அதே கரையில் இரண்டொரு மைல் தூரம் சென்று அதற்குப் பிறகு ஒரு பாலத்தைக் கடந்து அடுத்த கரையிலுள்ள திருமண மண்டபத்திற்கு வந்தாக வேண்டும். அவர்கள் ஆற்றில் இறங்கி குறுக்கே சென்றால், நாங்கள் செல்வதற்கு முன் மணப் பந்தலை அடைந்து விடலாம். ஆற்றில் நீர் இல்லாததால் அவர்கள் ஆற்றைக் கடப்பதற்கு வேகமாக இறங்கி விட்டார்கள். நாங்கள் காரில் சென்று, பாலத்தைக் கடந்து, அடுத்தகரை வழியாக வந்து கொண்டிருந்த நேரத்தில் ஒரு இடத்தில் கூட்டம். அன்பில் தர்மலிங்கம் கீழே இறங்கி என்னவென்று விசாரித்தார். ஆற்றின் குறுக்கே இறங்கி நடந்து வந்த வாலிபர்களில் ஒருவரைக் காணவில்லை என்றும் தேங்கியிருந்த தண்ணீரில் ஊற்றுக் கிணறு தோண்டியிருந்தது தெரியாமல் மூழ்கி விட்டதாகவும், அவரைத் தேடுவதாகவும் சொன்னார்கள். நாங்கள் அனைவரும் பதறிப் போய் கீழே



இறங்கினோம். 25 வயது கூட நிரம்பாத அந்தக் கட்டிளங்காளை பிணமாகத் தான் கிடைத்தான். பிழைக்க வைத்து விட முடியுமா என்பதற்காக எங்கள் காரிலேயே வைத்து அருகில் உள்ள மருத்துவ மனைக்குத் தூக்கிச் சென்றோம். பயனில்லை. திருமணமாகி ஒன்றரை ஆண்டுகளே ஆன அந்த வாலிபனின் உயிரற்ற உடலை அவன் வீட்டிற்கு அனுப்பும் ஏற்பாடுகளைச் செய்து விட்டு, மண வீட்டிற்குச் சென்று மண விழாவிலே கலந்து கொண்டு, வாழ்த்துரை எதுவும் கூறாமல் நானும் நண்பர்களும் கல்லணைக்குத் திரும்பி விட்டோம்.

அன்று மாலையில் கொள்ளிடம் ஆற்றைக் கடந்துதான் அடுத்த கரையில் உள்ள கிராமத்தில் கழக கூட்டத்தில் பேச வேண்டும். கொள்ளிடம் ஆற்றில் தண்ணீர் இல்லை. ஓரத்தில் மாத்திரம் முழங்கால் அளவு தண்ணீர் ஓடிக் கொண்டிருந்தது. காரை கல்லணையிலேயே விட்டு விட்டு இரட்டை மாட்டு வண்டி ஒன்றில் ஆற்றின் குறுக்கே சென்று குறிப்பிட்ட கிராமத்தை அடைவது என்று திட்டமிடப்பட்டது. அவ்வாறு மாலை ஆறு மணிக்குப் புறப்பட்டு, அந்தக் கிராமத்தை ஏழு மணிக்கெல்லாம் சென்று அடைந்தோம். இரவு கூட்டம் முடிய பத்தரை மணியாயிற்று. அதற்கு மேல் உணவு அருந்திவிட்டு பதினொன்றரை மணி சுமாருக்கு கல்லணைக்குப் புறப்பட்டோம்.

அங்கிருந்தவர்கள், மறுபடியும் மாட்டு வண்டியில் சென்றால் மூன்று மைல் சுற்றிக் கொண்டு போக வேண்டும், இந்தக் கிராமத்தில் இருந்தவாறே நேரே கொள்ளிடம் ஆற்றில்



இறங்கினால் அதோ கல்லணை எதிரில் தான் இருக்கிறது, விரைவில் போய்ச் சேர்ந்து விடலாம் என்று எதிர்க்கரையில் எரியும் விளக்குகளைக் காட்டினார்கள். கூட இருந்த நண்பர்களும் அந்த யோசனையை ஒப்புக் கொள்ளவே நானும் தலையை அசைத்து விட்டேன்.

அந்த இரவில் கொள்ளிடத்தின் குறுக்கே இறங்கி கொஞ்ச தூரம் நடந்திருப்போம். திடீரென வானத்தில் இடி முழக்கம், மின்னல் வெட்டுகள், வேகமான காற்று. மழைத்துளிகள். பாதி ஆற்றைக் கடந்திருப்போம். நாங்கள் சற்றும் எதிர்பாராத வண்ணம் இயற்கையின் உறுமலைக் கண்டு திடுக்கிட்டுப் போனோம். அதைவிடப் பயங்கரம் ஆற்றில் வெகு வேகமாகத் தண்ணீர் பெருக ஆரம்பித்து விட்டது. இடி! மின்னல்! மழையோ கொட்டுகிறது. ஓரத்தில் முழங்கால் அளவு ஓடிக் கொண்டிருந்த தண்ணீர் இடுப்பளவு என்று ஆறு முழுவதும் பெருகியது. சற்று நேரத்திற்கெல்லாம் மார்பளவு தண்ணீராகி விட்டது. பண்ணை முத்துகிருஷ்ணன் மிகவும் குள்ளமானவர், அவருக்கு உதட்டளவு தண்ணீர். உடனே அவரைப் பக்கத்தில் இருந்த ஒருவர் தூக்கிக் கொண்டார். மாறனை அன்பில் தர்மலிங்கம் தூக்கிக் கொண்டார். ரத்தினம் என்ற ஒரு தோழர் என்னைத் தூக்கிக் கொண்டார். அந்த இருளில் நாங்கள் எங்கு போகிறோம் என்றே தெரியவில்லை. ஆற்றுப் பிரவாகம் திடீரென்று ஏற்படும்போது அதைச் சமாளிக்க முடியாமல் மனிதன் எப்படி மூழ்கி விடுகிறான் என்பதை அன்றுதான் நான் அனுபவரீதியாக உணர்ந்தேன். காலை அழுத்தமாக மணலில் ஊன்றினால் காலுக்கடியில்



இருக்கும் மணலைத் தண்ணீர் பறித்துக் கொண்டு போய் விடுகிறது. காலுக்குக் கீழே ஒரு சிறு குழி ஏற்படுகிறது. உடல் ஒரு நிலையில் நிற்க முடியாமல் ஆகிவிடுகிறது. அந்தச் சூட்சுமத்தை ஏற்கனவே உணர்ந்து பழக்கப்பட்ட அந்த நண்பர்கள் உடனடியாக எங்களைத் தூக்கிக் கொண்டு ஆற்றில் வெள்ளத்தை எதிர்த்துப் பயங்கரமான பயணத்தில் ஈடுபட்டார்கள் என்றாலும், எனக்கென்னவோ கரை போய்ச் சேருவோம் என்ற நம்பிக்கையே இல்லை. திரும்பிக் கரைக்குப் போவதற்கும் முடியாது – வந்த அளவு தொலைவு திரும்பிப் போகவேண்டும். மாறனை வேறு அழைத்து வந்து விட்டோமே என்ற கவலை என்னை உலுக்கியது. நீண்ட நேரம் ஆற்று வெள்ளத்தோடு யுத்தமே நடத்தி நண்பர்கள் எங்களையும் காப்பாற்றி, தங்களையும் காப்பாற்றிக் கொண்டார்கள். நாங்கள் கல்லணையுள்ள அடுத்த கரை வந்து சேர்ந்த போது இரவு ஒரு மணிக்கு மேல் இருக்கும். அந்த நேரத்தில் அந்தப் பகுதி மக்களே பதறிப் போய் எங்களைச் சூழ்ந்து கொண்டார்கள்.

என்னுடன் வந்து இந்தக் கண்டத்திலிருந்து தப்பிய மாறன் இந்தியத் துணைக் கண்டத்திற்கே வந்துற்ற மிசா கால நெருக்கடி நிலை என்ற கண்டத்திலும் தப்பிப் பிழைத்ததுதான் விந்தையினும் விந்தையாகும். நெருக்கடி பிரகடனப் படுத்தியதைத் தொடர்ந்து அதனை எதிர்த்துக் குரல் கொடுத்தமைக்காக கழகத்தின் ஆட்சியும் கலைக்கப்படவே; சிறைப்பட்ட மிசாக் கைதிகளின் பட்டியலில் மாறனையும் இணைத்திட போலீசார் முனைந்தனர். ஆட்சி கலைக்கப்பட்ட



1989 ஆம் ஆண்டில் மத்திய அமைச்சராக பதிவி ஏற்பு



அடுத்தநாளே என் மகன் மு.க. ஸ்டாலினைக் கைது செய்து கொண்டு போன போலீசார் அதைத் தொடர்ந்து முரசொலி மாறன் எங்கே என்று தேடினார்கள். அவருடைய நெருங்கிய நண்பர் கமலநாதன் எம்.பி., யுடன் டெல்லியிலிருந்து சென்னைக்கு விமானத்தில் வந்த மாறன் எம்.பி.யும் வழியிலே ஐதராபாத்திலோ, பெங்களூரிலோ விமான நிலையத்தில் இறங்கி, உடனடியாக சென்னைக்கு வராமல் தலைமறைவாகி விட்டார்கள்.

என்ன ஆனார்கள்? எங்கே போனார்கள்? என்ற கவலையில் எங்கள் வீட்டார் கலங்கித் தவிக்கிறார்கள். அப்பொழுதுதான் பரோடா வழக்கு எனும் பயங்கர வழக்கு தொடரப்பட்டு ஜார்ஜ் பெர்னாண்டஸ் போலீசாரால் தேடப்பட்டு வருகிறார். அவரைப் போலவே ஒரு தீவிரப் போராட்டத்தில் குதிக்க இருப்பதாகவும், அதற்கு என்னுடைய வாழ்த்து வேண்டுமென்றும் மாறன் எனக்கு ஒருவர் மூலம் கொடுத்தனுப்பிய ரகசியக் கடிதம் எனக்கு வந்து சேர்ந்தது. கடிதம் கொண்டு வந்த ஆள் வாயிலாக மாறன் இருப்பிடத்தைத் தெரிந்து கொண்ட நான்; உடனே அவர் ஈடுபட விரும்புகிற அந்தத் தீவிரப் போராட்டத்தைத் தடுத்து நிறுத்திட நினைத்து; அவரை உடனே வந்து என்னைப் பார்க்குமாறு பணித்தேன்.


காவல்துறையினர் கண்களில் பட்டு விடாமல், அவரும் கமலநாதனும் கார், ஆட்டோ, மோட்டார் சைக்கிள் என வாகனங்களை மாற்றிக் கொண்டு – மாறுவேடத்தில் நள்ளிரவு நேரத்தில் வீட்டுக்கு வந்து சேர்ந்தார்கள். மிசா நெருக்கடி



நிலையை எதிர்த்து இப்போது நடைபெறுவது இந்தியாவின் இரண்டாவது சுதந்திரப் போராட்டம் என்றும், அதற்குத் தங்களைப் போன்றவர்கள் எவ்விதத் தியாகத்திற்கும் தயார் என்றும் மாறன் சொன்னபோது அவர் மயிர்க்கால்கள் எல்லாம் சிலிர்த்தன.

என்னதான் உன் போர் முறைக்கு நியாயம் கற்பிக்கப்பட்டாலும்; நமது இயக்கத்திற்கு இது உடன்பாடான முறையல்ல; மிசா நெருக்கடிப் பிரகடனத்திற்கு அதனைப் பிரயோகம் செய்தவர்கள் சொல்லுகிற பொருந்தாக் காரணங்களுக்கு; நாமே வலுவில் சென்று வலியூட்டுவதாக இது அமைந்து விடும் என்று ஒரு மணி நேரத்திற்கு மேலாக இருவருக்கும் அறிவுரை கூறினேன். கமலநாதன், எம்.பி.. யைக் கடிந்து கொண்டு உடனே ஊருக்குத் திரும்பிச் செல்க என்று கட்டளையிட்டேன். மாறனோ; மாநிலங்களவையிலும், நாடாளுமன்றத்திலும், டெல்லியிலும் பல அரசியல் கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்து, விவாதித்து, வேகம் பெற்று வந்திருந்த காரணத்தால் சுலபத்தில் வேகம் தணிந்து என் பேச்சுக்குச் செவி சாய்ப்பதாயில்லை.

வடக்கே மட்டுமல்ல; தெற்குப் பகுதியிலும் – கிழக்கிலும் மேற்கிலும் இந்திய பூபாகம் முழுதும் அடக்குமுறைக் கொடுமைகள் தலைவிரித்தாடியதை; 40 வயதே ஆகியிருந்த தம்பி மாறனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை என்பதை நான் தெளிவாக உணர்ந்திருந்தாலும்; அந்த வேகத்தைத் தணிக்க அரும்பாடுபட வேண்டியதாக இருந்தது.



முதல்கட்டமாக நடைபெற்ற சுதந்திரப் போராட்டத்து வன்முறை நிகழ்ச்சிகளையே நமது இயக்கம் ஏற்றுக் கொண்டதில்லை; இப்போது இரண்டாவது சுதந்திரப் போராட்டம் என்ற பெயரால் இந்த இயக்கம் அந்த முறைகளை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்? என்று சற்று சூடாகவே பேசினேன். அதற்கு விளக்கமளித்த மாறன், எமர்ஜன்சியை எதிர்த்து ரகசியப் பிரச்சாரம் மட்டுமே செய்யப்போவதாகக் கூறி அனுமதி கேட்டார்.

அதையும் நான் தடுத்து, அந்த ஒரு நாள் முழுவதும் மாறனை வீட்டுக்குள்ளேயே ரகசியமாக வைத்திருந்து; தி.மு.க. வழிக்கே மீண்டும் திருப்பி, போலீசாருக்கும் மாறன் டெல்லியிலிருந்து வந்து விட்டார் என்று செய்தி அனுப்பி; அவர்களும் உடனடியாக வந்து மாறனைக் கைது செய்து அழைத்துப் போனார்கள். சிறைச்சாலை என்ற பெயரால் அப்போது சென்னையில் இயங்கிய சித்திரவதைச் சாலையில் மாறனும் சிக்கிக் கொண்டார் – சிறையில் சிட்டிபாபுவை, சாத்தூர் பாலகிருஷ்ணனை மிசா காலத்தில் இழந்தது போல் மாறனையும் இழக்க நேரிடுமோ என்ற அச்சம் அனைவரையும் ஆட்டிப் படைத்தது.

கடுமையான காய்ச்சல் – முதுகுத் தண்டு வலி – சிறை மருத்துவ மனையிலிருந்து வெளியே உள்ள அரசு மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். ஆனால் அதுவரையில் சுமார் ஒன்றரை மாதத்திற்கு மேலாக வீட்டிலே உள்ளவர்கள் கூட அவரை நேர் காணலில் சந்திப்பதற்கு அனுமதிக்கப்பட வில்லை. 45 நாட்களுக்குப் பிறகு அவரைக் கைதியாக அரசு



மருத்துவ மனையில் சந்தித்தோம் – ஜன்னி பிறந்த நிலையில் – கண் விழித்துப் பார்க்க முடியாமல் படுக்கையில் கிடத்தப் பட்டிருந்தார். எங்கள் குடும்ப டாக்டர்கள், ஆட்சி இருந்த வரையில் வீட்டுக்கே ஒரு நாளைக்கு நாலு தடவை வரக் கூடியவர்கள்; மாறனைப் பார்த்து சிகிச்சை அளிக்கவே பயந்தார்கள். அவரைப் பார்ப்பதையே தவிர்த்தார்கள்; தங்கள் வேலை போய்விடுமோ என்று! ஆனால் அந்த நேரத்திலும் எதைப் பற்றியும் கவலைப்படாமல்; மனித நேய உணர்வுடன் – மருத்துவத் துறையின் கடமையைச் செய்ய வேண்டுமென்ற பண்பாட்டுடன் வேளை தவறாமல் மருத்துவ மனைக்கு வந்து மாறனுக்கு சிகிச்சை அளித்தவர் தான் அண்மையில் மறைந்து விட்ட மருத்துவமேதை டாக்டர் இராமமூர்த்தி அவர்கள். துணிச்சலோடு வந்து சிகிச்சையளித்த மற்றொருவர் டாக்டர் ரங்கபாஷ்யம்.

ஓராண்டு காலம் சிறை அதிகாரிகளின் கட்டுப்பாட்டில் பூட்டப்பட்டுக் கிடந்த மாறன், அடுத்து 25 ஆண்டுகள் கழித்து காவல் துறை அதிகாரிகளின் கிடுக்கிப் பிடியில் சிக்கி; தனது இறுதி முடிவையே தேடிக் கொள்வதற்கான ஆரம்பமாக அமைந்தது; நான் நள்ளிரவில் கைதான ஒரு நிகழ்ச்சிதான் என்கிறபோது என் மனம் என்ன பாடுபடும்?

இன்னும் 15 ஆண்டுகளாவது வாழ்ந்திட முடியும் என்ற நம்பிக்கையுடன் அறுவை சிகிச்சை வெற்றிக்குப் பிறகு அன்றாட அலுவல்களையும், அமைச்சரவைப் பணிகளையும் அயல்நாட்டுப் பயணங்களையும் மேற்கொண்டிருந்த மாறன், இப்படியொரு முடிவைத் தேடிக் கொள்வதற்காகவே

# 33



டெல்லியிலிருந்து சென்னைக்கு வந்தது போல அந்த நள்ளிரவு நிகழ்ச்சி அமைந்தது என்றே சொல்லலாம்.

2001ஆம் ஆண்டு மே திங்கள் வரையில் ஆட்சிப் பொறுப்பில் இருந்த நான், அப்போது தான் தேர்தலில் தி.மு.க. வெற்றி வாய்ப்பை இழந்த காரணத்தால் சட்டப் பேரவையில் எதிர்வரிசையில் இடம் பெறுகிறேன். அப்போது மாறன் மத்திய அமைச்சர். சென்னைக்கு வந்து என்னைச் சந்தித்த மாறன்; சென்னையில் ஜுன் 30ந்தேதி இரவு நடைபெற்ற அந்த நிகழ்ச்சியை, அவரே ஜுலை 2ந்தேதி பிரதமர் வாஜ்பய் அவர்களுக்குத் தன் கைப்பட எழுதிய கடிதத்தில் விரிவாகக் குறிப்பிட்டிருக்கிறார். அது வருமாறு :–

“ஜுன் 30ந்தேதி நள்ளிரவு 1.45 மணிக்கு போலீசார் தி.மு.க. தலைவர் கலைஞர் வீட்டுக் கதவை உடைத்துக் கொண்டு அவரது படுக்கை அறைக்குள் திபுதிபு என்று புகுந்து உள்ளனர். உடனே கலைஞரிடம் இருந்து எனக்கு தொலைபேசி அழைப்பு வந்தது. நான் அவரது வீட்டுக்கு விரைந்தேன். அங்கு எனது தலைவர் கலைஞர் இரவு உடையில் (லுங்கி) இருந்தார். அவரைச் சுற்றி ஏறத்தாழ 20 போலீஸ் அதிகாரிகள் நின்று கொண்டிருந்தார்கள். அப்போது யாரோ ஒருவர் கருணாநிதியை கைது செய்துள்ளோம் என்று கத்தினார். உடனே நான் சம்மன் இருக்கிறதா, என்ன குற்றச்சாட்டு என்று கேட்டேன். அதற்கு ஒரு ஐ.பி.எஸ். போலீஸ் அதிகாரி இந்தக் கேள்வியைக் கேட்க நீங்கள் யார் என்று கேட்டார். இன்னொரு போலீஸ் ஐ.பி.எஸ். அதிகாரி மோசமான வார்த்தைகளால்,



நாங்கள் யாருக்கும் பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்றார். இந்த நேரத்தில் இன்னொரு ஐ.பி.எஸ். அதிகாரி என்னைப் பிடித்து தள்ளி விட்டார். அந்த ஆளை (கலைஞரை) வண்டிக்கு தூக்கி வாருங்கள் என்று கத்தினார்.

என்னைத் தள்ளி விட்டதால் ஏற்பட்ட அதிர்ச்சியில் இருந்து மீள்வதற்குள் இன்னொரு அதிகாரி என் கையைப் பிடித்து இழுத்து என்னை அடிக்கு மேல் அடித்து ஹாலின் ஓரத்துக்கு தள்ளிவிட்டார். இந்த சூழ்நிலையில் கலைஞரை மிருகத்தனமாக தாக்கியதில் அவர் தடுமாறி கீழே விழுந்தார். அவர் வலி தாங்காமல் அலறினார். அதையும் பொருட்படுத்தாமல் அவரை ஒரு மூட்டையை தூக்குவது போல் தூக்கிச் சென்றனர். அவரை தூக்கிச் சென்றவுடன் வெளிப்புறமாக நின்று கதவைப் பூட்டிவிட்டார்கள். பின்னர் நான் சி.பி., சி.ஐ.டி. அலுவலகத்துக்கு விரைந்தேன்.

அங்கு கலைஞர் உதவி கேட்டு அலறியதால் நான் போர்ட்டிகோவுக்கு ஓடி வந்தேன். கலைஞருடன் துணைக்கு நானும் காருக்குள் ஏறிக் கொண்டேன். உடனே போலீசார் காரை சுற்றி வளைத்துக் கொண்டனர். எந்த முன் எச்சரிக்கையும் செய்யாமல் கார் கதவை திறந்து என் கையைப் பிடித்து வெளியே இழுத்தார்கள். உடனே ஒரு போலீஸ் அதிகாரி உங்களையும் கைது செய்கிறோம் என்று கத்தினார். என்னைப் பார்த்து அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார்கள். காரை விட்டு வெளியே வராவிட்டால் எனக்கு சரியான பாடம் கற்பிக்க போவதாக பயமுறுத்தினார்கள்.



அப்போது சில போலீசார் தயக்கம் காட்டினர். ஆனால் இரண்டு மூன்று போலீஸ் அதிகாரிகள் சத்தம் போட்டுக் கொண்டே என்னை வெளியே இழுத்தார்கள். அப்போது எல்லா போலீசாரும் சேர்ந்து என்னை பிடித்துக் கொண்டார்கள். எனக்கு அடிக்கு மேல் அடி விழுந்தது. பார்சலை வெளியே இழுத்துப் போடுவது போல் என்னை வெளியே இழுத்து எறிந்தனர். நான் வாசல் படிக்கட்டுகளில் போய் விழுந்தேன்.

எனது வலது கண்ணில் தாக்கியதில் எனது மூக்கு கண்ணாடி உடைந்து விட்டது. ஆனால், எனது கண்ணுக்கு பாதிப்பு ஏற்படவில்லை. பின்னர் எனது தலையில் அடித்தார்கள். ஒருவர், சரியான இடத்தில் அடியுங்கள் என்றார். உடனே பேஸ்மேக்கர் பொருத்தப்பட்ட எனது இடது மார்பில் அடி விழுந்தது. எனது வேட்டியை உருவி கிழித்தார்கள். நான் உள்ளாடையுடன் (அண்டர்வேர்) நின்றேன். பின்னர் என்னை கீழே வீசினார்கள். கடுமையாக பூட்ஸ் காலால் எட்டி உதைத்தனர். எனது வலது காலில் காயம்பட்டு இரத்தம் வழிந்தது. உடனடியாக நான் நிலைகுலைந்து மூச்சு விடுவதற்காக திணறினேன். என்னை மருத்துவமனைக்குக் கொண்டு செல்லுங்கள் என்று முணு முணுத்துக் கொண்டே இருந்தேன்.

இதன் பிறகு கிழிந்து வேட்டியுடனும், இரத்தம் வழியும் நிலையிலும் என்னை காருக்கு கொண்டு சென்றனர். ஆனால் கார் சாவியை போலீசார் எடுத்துச் சென்றுவிட்டனர் என்று கூறிவிட்டார். அப்போது ஒரு ஆட்டோ ஓட்டுநர் என்னை



அடையாளம் கண்டுபிடித்து என்னை முதன்மை அமர்வு நீதிபதி அசோக்குமார் இல்லத்துக்கு ஆட்டோவில் அழைத்துச் சென்றார். அங்கிருந்து ஆம்புலன்சில் அப்பல்லோ மருத்துவமனைக்குச் சென்றேன். அவசர சிகிச்சை பிரிவில் பல்வேறு பரிசோதனைகள் செய்த பிறகு உள்நோயாளியாக அனுமதித்தனர்.”

இவ்வாறு பிரதமருக்குக் கடிதம் எழுதியதைத் தொடர்ந்து பின்னர் மருத்துவமனையிலிருந்து திரும்பிய பிறகு செய்தியாளர்களின் சந்திப்பின்போது வெளியிட்ட விபரங்களும், தன்னை விசாரிக்கும் குழுவினரிடம் அளிப்பதற்காக தட்டச்சு செய்து வைத்திருந்த விரிவான தகவல்களும் எவ்வளவு உருக்கமாகவும், அவருடைய உயிரையே பறிப்பதற்காக நடைபெற்ற தாக்குதலின் சுருக்கமாகவும் இருக்கிறதென்பதை சரியாகவே உணர முடிகிறது.

“நான் கடந்த 35 ஆண்டு காலமாக மக்கள் அவையிலோ, மாநிலங்கள் அவையிலோ ஒரு உறுப்பினராக இருந்து வருகிறேன். இப்போது அமைச்சர் என்ற நிலையில் நான் தாக்கப்பட்டேன், அடிக்கப்பட்டேன், முரட்டுத்தனமாக நடத்தப்பட்டேன். என்னுடைய தலைவரும் முன்னாள் முதல் அமைச்சருமான கலைஞர் கைது செய்யப்பட்டபோது நான் உடனே அவருடைய இல்லத்திற்கு விரைந்தேன். அங்கே அவர் காவல் துறை அதிகாரிகளால் சூழப்பட்டிருந்தார். அந்த அதிகாரிகள், என்னை மரியாதைக் குறைவாகப் பேசத் தொடங்கினார்கள். நீ, வா, போ என்றெல்லாம் ஒருமையில்



குறிப்பிட்டுப் பேசினார்கள். ‘நீ யாரடா கேட்பது?’ என்று என்னிடம் ஒரு அதிகாரி கேட்டார். பிறகு என்னை அங்கிருந்து தள்ளி விட்டார்கள். எங்கள் தலைவரைத் தூக்கிக் கொண்டுபோய் வாகனத்தில் போட்டார்கள். இவற்றையெல்லாம் நீங்கள் ஒளிநாடாவில் பார்க்கலாம்.

நான் அவர்களைப் பின் தொடர்ந்தேன். அவர்கள் சி.பி., சி.ஐ.டி. அலுவலகத்திற்குச் சென்றார்கள். அங்கேயும் நான் அனுமதிக்கப்பட வில்லை. அங்கே அவர்கள் என்னைத் தாக்கினார்கள். இதோ பாருங்கள்! என்னுடைய மூக்கு கண்ணாடி! இது உடைந்திருப்பதை நீங்கள் பாருங்கள்! அவர்களுடைய தாக்குதலினால் எனக்கு மயக்கம் வந்தது. ஆகவே நான் அங்கேயே படுத்து விட்டேன்.

இந்தப் படத்தைப் பாருங்கள். நான் அரை நிர்வாணமாக இருக்கிறேன். நான் கீழே விழுந்த நேரத்தில் காவல் துறையினர் தங்களின் பூட்ஸ் கால்களால் என் கால்களை மிதித்தார்கள். அந்தக் காயம் இன்னும் எனக்கு இருக்கின்றது. இவைகள் எல்லாம் என்னுடைய வேட்டியில் ஏற்பட்ட ரத்தக் கறைகள். இப்போது நீங்கள் பாருங்கள் இந்த வேட்டியை! எவ்வளவு கிழிந்திருக்கிறது? எவ்வளவு ரத்தம் உறைந்திருக்கிறது என்பதை யெல்லாம் பாருங்கள்! எல்லா புறங்களிலிருந்தும் ரத்தம் வடிந்தது. நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையிலாவது காவல் துறையினரிடம் நான் ஒரு நியாயமான மரியாதையை எதிர்பார்த்தேன். அந்த மரியாதை மறுக்கப்பட்டது மட்டுமல்ல; எனக்கும் மத்திய அமைச்சர்



டி.ஆர். பாலுவுக்கும் அரசு அதிகாரிகளால் அளவுக்கு மீறிய அவமரியாதை அளிக்கப்பட்டது. நான் மிக மோசமாகத் தாக்கப்பட்டேன். கடந்த ஆண்டிலே எனக்கு இதயக் கோளாறு ஏற்பட்டது உங்கள் அனைவருக்கும் தெரியும். முதலில் எனக்கு மயக்கம் ஏற்பட்டது. மீண்டும் ஒரு முறை மயங்கினேன். என்னை அவர்கள் காவல் நிலையத்திற்கு சுமந்து சென்ற நேரத்தில் ஒரு பிணத்தைத் தூக்கிச் செல்வதைப் போல தூக்கிச் சென்று ஒரு மேஜை மேல் என்னைப் படுக்க வைத்தார்கள். என் முகத்தில் தண்ணீர் தெளிக்கவோ, எனக்கு குடிநீர் கொடுக்கவோ அங்கே யாருமே இல்லை. அங்கிருந்தவர்கள் எல்லாம் ஓடி விட்டார்கள். நான் அங்கேயே இறந்து போனால் தாங்கள் சாட்சியாகி விடக் கூடாது என்று நினைத்தார்களோ என்னவோ? போலீஸ் நிலையம் முழுவதும் ஆளின்றி இருந்தது. பிறகு நான் மெதுவாகத் தட்டுத் தடுமாறி அருகில் இருந்த நீதிபதி வீட்டிற்குச் சென்றேன். அங்கே எனக்கு முன்னால் கலைஞர், முன்னாள் தலைமைச் செயலாளர் நம்பியார் ஆகியோர் அழைத்து வரப்பட்டிருந்தனர். நீதிபதி அவர்கள் என்னை அங்கே அமரச் செய்தார்.பிறகு அவர் அனைவரையும் ரிமாண்ட் செய்தார். நான் எழுந்து என்னுடைய நிலை என்ன என்று நீதிபதியிடம் கேட்டேன். அவர் காவல் துறையினரைக் கேட்டார். காவல் துறையினர் நாங்கள் அவரைக் கைது செய்யவில்லை என்று கூறினர். ஒரு ஆம்புலன்ஸ் வண்டி அங்கே வந்தது. என்னை அதிலே ஏற்றி மருத்துவ மனையில் சேர்த்தார்கள்.



நான் ஒரு இயந்திரத்தால் இயக்கப்படும் மனிதன். எனக்கு பேஸ் மேக்கர் கருவி பொருத்தப்பட்டுள்ளது. இப்பொழுது என்னுடைய இதயத் துடிப்பு எந்த அளவிற்கு உள்ளது என்று கேட்டால் அந்தக் கருவி பதில் சொல்லும். அது ஒரு நவீனக் கருவி. இந்த நிகழ்வுகள் நடந்த நேரத்தில் மூன்று முறை என்னுடைய இதயத்துடிப்பு மிக உச்சத்தைத் தொட்டதாக அந்தக் கருவி காட்டியிருக்கிறது. என்னை அவர்கள் மிகக் கடுமையாகத் தாக்கினார்கள். என்னை இல்லாமல் செய்வதற்காக வேண்டுமென்றே அவர்கள் செய்த சதி இது. இது யாருக்கு வேண்டுமென்றாலும் ஏற்படக் கூடும். ஒரு மத்திய அமைச்சருக்கே இந்தக் கதியென்றால் மற்றவர்களிடம் இந்த அதிகாரிகள் எப்படி நடப்பார்கள் என்று யோசித்தீர்களா? உங்களுக்கு என்னுடைய இயல்பு தெரியும். எனக்கு எதிரிகள் இல்லை என்ற காரணத்தினால் நான் எப்பொழுதும் பாதுகாப்புக்காக யாரையும் என்னுடன் வைத்துக் கொள்வதில்லை. அதிலும் குறிப்பாக என்னுடைய தொகுதியான சென்னைக்குச் செல்லும் போது நான் பாதுகாப்பு அதிகாரிகளை உடன் வைத்துக் கொள்வதில்லை. எப்பொழுதுமே என்னுடைய பாதுகாப்பு அதிகாரி நான் செல்லும் வாகனங்களில் முன் இருக்கையிலே இருக்க மாட்டார். அந்த இடத்தில் என்னுடைய நண்பர்களோ, அல்லது வேறு யாராவது நாடாளுமன்ற உறுப்பினர்கள் தான் இருப்பார்கள். திரு. வி.பி. சிங் காலத்தில் நான் அமைச்சராக இருந்த போது கூட, என்னுடன் பாதுகாப்பு அதிகாரிகளை வைத்துக் கொள்வதில்லை. இதைக் குறித்து எனக்கு ஆலோசனை கூறியவர்கள் "உங்களுக்கு எதிரிகள் யாரும்




இல்லாமல் இருக்கலாம். ஆனால், தீவிரவாதிகள்; பாதுகாப்பு குறைவாக உள்ள அமைச்சர்களைத்தான் தாக்க நினைப்பார்கள். எனவே நீங்கள் அமைச்சராக இருக்கும் வரை நிச்சயமாக பாதுகாப்பு அதிகாரிகளை உடன் அழைத்துச் செல்ல வேண்டும்'' என்று தெரிவித்தார்கள். அதன் பின்னா தான் நான் பாதுகாப்பை ஏற்றுக் கொண்டேன். பாதுகாவலர்கள் அப்போது இருந்திருந்தால் இந்தச் சம்பவம் நடந்திருக்க முடியாது.

அன்று மாலை தான் நான் அனுமதிக்கப்பட்டிருந்த மருத்துவமனைக்கு போலீஸ்காரர்கள் வந்து நான் கைது செய்யப்பட்டிருப்பதாகக் கூறினார்கள்.''


தம்பி முரசொலி மாறன், நம்மை விட்டுப் பிரிந்தமைக்கு ஆரம்பக் காரணம் எது என்பதை அவரது இந்த ஆதாரபூர்வமான வாக்குமூலமே – அவரது மரண சாசனமாக அமைந்து நமக்கு நிரூபிக்கிறது.

இங்கிலாந்து பிரதமரை இந்திய அரசின் சார்பாக அவரது இல்லத்தில் சந்திக்க 21.5.1997 அன்று இலண்டன் சென்றிருந்த முரசொலி மாறன் அங்கிருந்து எனக்கு எழுதிய கடிதத்தில் "10 டவுனிங் தெருவிற்குள் நுழையும்போது தன்னம்பிக்கைக்காக ஆத்தா! தாத்தா! என்று மனதிற்குள் முனகிக் கொண்டே நுழைந்தேன்! (அஞ்சுகம் அம்மையார், முத்துவேலர்). இலண்டன் புறப்படுவதற்கு முன் திரு. குஜ்ராலைச் (பிரதமரை) சந்தித்து இங்கிலாந்து பிரதமர் டோனி பிளேயரிடம் எப்படிப் பேசுவது, என்ன பேசுவது என்று





இங்கிலாந்து பிரதமர் டோனிபிளேயருடன் மத்திய அமைச்சர் முரசொலி மாறன்



கேட்பதற்காகப் போயிருந்தேன். "எனக்கு நேரமில்லை; நீயே பார்த்துக் கொள்!" என்று கூறிவிட்டார். இது Policy Matter ஆயிற்றே; விளக்கம் வேண்டுமே! என்றேன். "பரவாயில்லை; நீ சொல்வதுதான் Policy" என்று கூறிவிட்டுக் களைப்புடன் சென்றுவிட்டார். இந்த மாபெரும் பொறுப்பு என்னை மயக்கத்தில் ஆழ்த்திவிட்டது! என்னாலேயே நம்ப முடியவில்லை – இப்படி வெற்றிகரமாக நான் செயல்படுவேன் என்று!" – இவ்வாறு அந்த மடலில் குறிப்பிட்டு விட்டு "நான் உங்கள் தயாரிப்பல்லவா?" என்று பாசம் பொங்கிடக் கேட்டுள்ள அந்த உணர்ச்சி மிக்க வாக்கியம்தான் என் உள்ளத்தில் மாறனின் மறக்க முடியாத மணியோசையாக ஒலித்துக் கொண்டே இருக்கிறது. அந்த ஒலிக்கு என் உயிர் இருக்கும்வரையில் ஓய்வில்லை – ஓயாமல் ஒலித்துக் கொண்டே இருக்கும்.

(நிறைவுறுகிறது)

## 42



## உன்னால் முடியுமா? முடியவே முடியாது!

தம்பி,

"புள்ளியாய்த் தோன்றி
பூமியாய் வளர்ந்தவரே!
நீங்கள் மரித்துப் போனதாய்
மனம் நம்பவில்லை!"

என்று கவிப்பேரரசு இரங்கல் கவிதை எழுதியுள்ளார் உனக்கு!

நீ மரித்துப் போகவில்லைதான் – பூமியாய் வளர்ந்து; வானமாகவே விரிந்து விட்டவனே! வானத்துக்கு மரணமேது?

இன்னொரு கவிஞர் வி.இளங்கோ என்பார்; இன்று எழுதியுள்ள கவிதையில்,

"தாய் மாமன் பலருக்கு உண்டு
மாமனே தாயானது உனக்கு மட்டுந்தான்"

என்று குறிப்பிட்டிருப்பதை முழுவதும் படிக்க முடியவில்லை; அதற்குள் அருவித் திரைகள் என் பார்வையை மறைத்து விட்டன.

இந்தத் தாயை விட்டுப் பிரியக் கூடாது என்பதற்காக, இந்தத் தாய் தாங்க மாட்டாள் என்பதற்காக நானூறு நாட்களுக்கு மேலாகக் கடும்போர் நடத்திக் கடைசியாக இயற்கையின் பக்கமே வெற்றியை வழங்கி விட்டுப் போய் விட்டாய்.



அன்று காவல்துறை அதிகாரிகளால்; உன் நெஞ்சுக்குள் ஏற்பட்ட அந்த விழுப்புண் – அதுவே நீ விழுவதற்கும் எம் விழிகளில் நீர் விழுதுகள் இறங்குவதற்கும் காரணமாகி விட்டது என்பதை எண்ணிப் பார்க்கும் போது; போர்க் குணம் படைத்த என் தங்கமே; அநீதியை, அராஜகத்தை எதிர்க்கக் கேடயமாகவும் ஈட்டியாகவும் எங்களுடன் இணைந்து இருந்தவனே! எப்போதும் அப்படியேதானிருப்பாய் எமது உணர்வாக; என்ற உறுதியையும் நம்பிக்கையையும் எம்மிடம் விட்டு விட்டுத்தான் சென்றிருக்கிறாய்!

குவளை மலரில் ஓர் இதழாய்த் தோன்றினாய்; என்னைப் போலவே! அந்தத் திருக்குவளைத் தெருவில்தான் என் மடியில் விளையாடினாய்! அந்தக் கிராமத்தில் படித்த என்னை இரண்டாம் படிவத்தில் சேர்ப்பதாகத் திருவாரூர் உயர்நிலைப் பள்ளிக்கு ஆசிரியர் அழைத்து வந்தார். தேர்வுகள் எழுதினேன், எழுதினேன்; இறுதியில் வெறும் ஐந்தாம் வகுப்பில்தான் சேர்க்கப் பட்டேன்; அதுவும் தெப்பக் குளத்தில் விழுந்து விடுவேன் என்று அந்தக் குளம் நோக்கி ஓடிய பிறகுதான் அந்த வகுப்பும் கிடைத்தது.

ஆனால் நீ என்னிடம் பாடம் கற்றாய். மூன்றாம் வகுப்பு படித்து முடித்த உன்னை ஐந்தாம் வகுப்புக்கே தகுதியென்று தேர்வு செய்தார்களே;



அதை நீ மனத்தில் வைத்துக் கொண்டுதானே – இங்கிலாந்து பிரதமரைச் சந்திக்க மத்திய அமைச்சராக இலண்டன் மாநகர் சென்றபோது அங்கிருந்து எனக்கு எழுதிய மடலில்

“நான் உங்கள் தயாரிப்பல்லவா?” என்று நன்றியுணர்வைப் பெருமிதத்துடன் வெளிப்படுத்தி யிருந்தாய்!

தொடர்ந்து அந்தக் கடிதத்தில், “என் சிந்தை – அணு ஒவ்வொன்றிலும் குடியிருந்து என் இதயத் துடிப்புகளாக இருந்து என்னை ஆட்டுவிக்கும் உங்கள் காலடிகளில் அனைத்தையும் சமர்ப்பிக்கிறேன்! – இப்படி நீங்களும் நானும்தான் கண்ணீர்ப் பெருக்கோடு உணர்ச்சிகளைப் பரிமாறிக் கொள்ள முடியும் – ஏனெனில் இது இரத்த பாசம்! நமது திருக்குவளைப் பின்னணி! நமது மாநிலக் கட்சி சூழ்நிலை!” என்று எழுதியிருந்தாய்.

அண்ணா எனக்கு எழுதிய கடிதங்களைக் கண்களில் ஒத்திக் கொள்வது போலத்தான் நீ இலண்டனிலிருந்து எனக்கு எழுதிய கடிதத்தையும் முத்தங்களால் நனைத்துக் கொண்டிருக்கிறேன்.

தாயின் முத்தத்தினையொத்த இந்தத் தாய் மாமனின் முத்தம் உனக்கும் இனிக்கும், எனக்கும் இனித்துக் கொண்டேயிருக்கும்.



என் மருமகன் என்ற தகுதியால் மட்டுமே பெருமை பெறுவதும், புகழ் பெறுவதும் நிறைவானதல்ல என்பதால் தான்;

ஓராண்டு மிசா சிறைவாச மெனும் தியாகக் கிரீடத்தை அணிந்து கொண்டாய்! அடக்குமுறை வெறிகளை – அராஜகத் தாக்குதல்களைத் தாங்கிக் கொண்டாய்!

அண்ணாவின் அளப்பரிய அன்புக்கும் பாசத்துக்கும் ஆளானாய்!

வாஜ்பய், வி.பி.சிங், குஜ்ரால் ஆகிய பிரதமர்கள் உள்ளிட்ட வடபுலத்துத் தலைவர்களின் வாஞ்சைமிகு வாழ்த்துக்களுக்கு உரியவன் ஆனாய்!

உலகின் கவனம் கவர்ந்த “தோகா” மாநாட்டில் நீ விரித்த புகழ்த் தோகையும் – கிளிண்டனுடன் விவாதித்த பெருமிதமும் – இங்கிலாந்தின் டோனி பிளேருடன் சந்திப்பும் – உன் கழுத்தில் ஊஞ்சலாடும் முத்தாரங்கள்!

கண்ணியத்துக்குரிய காயிதேமில்லத்தும், மூதறிஞர் இராஜாஜியும், பேரறிஞர் அண்ணாவும் கையெழுத்திட்ட வேட்பு மனுவல்லவா உன்னை தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினராகவும் – வெளிநாட்டுப் புகழாரங்களைத் தோளில் சுமக்கும் வெற்றி வீரனாகவும் – விளங்கிடச் செய்தது!



மாநில சுயாட்சிக்கு 'வேதமே' எழுதி முரசொலித்தாய். ஆனாலும் மத்திய அரசுதான் உனக்கு இறுதி இராணுவ மரியாதை செலுத்தியது.

குவளையில் பிறந்து குவலயம் போற்றிடப் பணி புரிந்தாய்! அந்தப் புகழ்ப் பூவின் மணம் சிறிதும் குறையாமல் புயல் அடிக்கும் என் நெஞ்சில் இப்போதும் தென்றலாய் வீசிக் கொண்டிருக்கிறாய்.

நீ போகலாம்; உன் நினைவுகளை என்னை விட்டு எடுத்துச் செல்ல உன்னால் முடியுமா? முடியவே முடியாது!

"முரசொலி மலர்''
30.11..2003

இவண்,
**மு.க.**




# என் நெஞ்சகத்தில் வாழ்வார்!

என் அன்புக் கண்மணி முரசொலி மாறனுக்கு இயற்பெயர் தியாகராஜசுந்தரம் – ஆனால் அவரைப் ''புத்திசாலி'' என்ற புனை பெயரில் அழைத்தால்தான் குழந்தைப் பருவத்தில் குதூகலிப்பார். இல்லையேல் கோபிப்பார். அது புனை பெயர் மட்டுமல்ல; பொருத்தமான பெயருங்கூட! இதனை நம் அனுபவம் தெரிவிக்கிறது.

''தியாகராஜசுந்தரம்'' என்ற பெயர்தான் எவ்வளவு பொருத்தம்!

ஏற்றுக்கொண்ட இலட்சியத்திற்காக மொழிப் போரின் போது, பாதுகாப்புச் சட்டப்படி கைது! பின்னர் ஜனநாயகம் மீட்கும் இரண்டாவது சுதந்திரப் போராட்டத்தில் நெருக்கடி நிலையை எதிர்த்து ஓராண்டு மிசா சிறைவாசக் கொடுமை. இரண்டு ஆண்டுக்கு முன்பு நள்ளிரவில் நான் காவல்துறை அதிகாரிகளால் தாக்கப்பட்டு கைதானபோது; ''ஏன் ?'' என்று கேட்டார் என்பதற்காக எத்தனை முறை என் கண் எதிரில் காவலர்கள் அவரைப் பந்தாடினார்கள் ?

அந்தத் ''தியாக''த்தை ஒட்டிய ''ராஜ'' என்ற சொல்லுக்கு ஏற்ப; டெல்லியில் அமைச்சராக – நாடு புகழ் நாடாளுமன்ற ஆற்றலாளராக – ''தோகா'' மாநாட்டுக்



கீர்த்திக் கிரீடம் அணிந்தவராக – அமெரிக்க அதிபருடன் விவாதம் – இங்கிலாந்து பிரதமருடன் சந்திப்பு என்று பெருமைக்குரியவராக ''ராஜகௌரவம்'' பெற்றிருந்தார்.

''சுந்தரம்'' என்பது தோற்றப் பொலிவு – முறுவலிக்கும் முகப் பொலிவு அல்லவா!

அந்தத் ''தியாகராஜசுந்தரம்'' தானே முரசொலி மாறனாக – தி.மு.க.வின் மூளையாக – என் மனச் சாட்சியாக – உலக நாடுகள் போற்றிட; என் உயிர் அணு ஒவ்வொன்றிலும் கலந்துவிட்டவர்.

அன்று என் மடியில் விளையாடிய மான்குட்டி – அறிஞர் அண்ணா அன்புடன் தட்டிக் கொடுத்த புலிக்குட்டி – அறிவு, ஆற்றல், அயராத உழைப்பு – இவற்றில் எப்போதும் படுசுட்டி!

அவரில்லாத வாழ்க்கை; எனக்கு வாழ்க்கையல்ல; அதனால் நான் வாழும் வரையில் என் இதயத்தில் அவரும் வாழ்வார்! இது அண்ணாவிடம் இரவலாகப் பெற்ற இதயமல்லவா!

❖❖❖❖






ARASU ARTS